உலகத் தமிழ் அமைப்பின் செயற்பாடுகள்:

கடந்த ஓராண்டாக உலகத் தமிழ் அமைப்பின் செய்தவைகள் சிலவற்றை கீழே குறிப்பிட்டு உள்ளேன்.

1 கணினியில் பயன்படுத்தப்படும் ஒருங்குறியில் தமிழ்-கிரந்தம் கலப்பு தொடர்பான பிரச்சனையில் தமிழர்க்கு ஏதுவான தீர்வு கிடைக்கப் பாடுபட்டது.

2 'தமிழர் பாதுகாப்பு இயக்கம்' வெளியிட்ட வெடித்த நிலத்தில் வேர்களைத்தேடி எனும் ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றை விளக்கிக் கூறும் ஆவணப்படமல் தயாரிக்க உதவி மற்றும் பரப்புரை செய்ய உதவி செய்தல்.

3 ஈகி முத்துகுமார் நினைவூர்த்திப் பயணம் தமிழ்நாட்டு உணர்வாளர்களால் ஒருங்கிணைக்கப்பட்டு சிறப்புற ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. அதற்கு உலகத் தமிழ் அமைப்பும் உதவிபுரிகிறது.

4 தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கையை அனைத்து வழிமுறைகளிலும் புறக்கணிக்க வேண்டி, 'இலங்கைப் புறக்கணிப்பு ஒறுங்கிணைப்புக் குழு' ஒன்று தொடங்கப்பட்டு உள்ளது. அதில் உதவி உலகத் தமிழ் அமைப்பும் இணைந்து செயல்படுகிறது.

5 ஈழத்தமிழரின் கொடுமையானப் போர் தழும்புகளை படம்பிடித்துக் காட்டும் 'என்ன செய்யலாம் இதற்காக?' நூல் வெளியிட அமைப்பில் உள்ளோர்கள் மூலம் பலவாறு உதவிபுரிந்தது.

6 கடந்த 2011 தமிழ்நாட்டு சட்டமன்ற தேர்தலில் தமிழ் நாட்டுத் தமிழர்களின் நலன்களையும், ஈழத் தமிழர்களின் நலன்களையும் முன்னிறுத்திப் போராடும் அரசியல், சமூக அமைப்புகளுக்கு பலவழிகளில் பரப்புரை மேற்கொள்ள உதவியது.

7 தமிழினப் பகையான 'காங்கிரசு கட்சியை' வேரறுக்கும் பணியில் ஈடுபடும் அமைப்புகளோடு இணைத்து தொடர்ந்து செயல்படுகிறது.

8 மே பதினேழு இயக்கத் தோழர்களை 2011 சட்டமன்றத் தேர்தலின்பொழுது காங்கிரசுக் கட்சியினர் வெறிகொண்டு தாக்கியதை கண்டித்து அறிக்கை வெளியிட்டது. மேலும் அமைப்பு மே 17 இயக்கத்திற்கு பொருளுதவி செய்த்து.

9 புது தில்லியில் உள்ள மாணவ அமைப்புகளால் ஒருங்கிணைக்கப்பட்ட ஐ.நா. அறிக்கை குறித்த கருத்தரங்கம் நடைபெற உதவி செய்தது.

10 அண்மையில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை அமைப்பு கூட்டத்தில் ஈழத் தமிழினப் படுகொலையை விவாதிக்க வேண்டி, அனைத்து நாட்டு ஐ.நா. முகவர்களுக்கும் வேண்டுகோள் அனுப்பியது.

11 ஈழத் தமிழரின் இனப்படுகொலைப் போர் தொடர்பான ஐ.நா. அறிவுரைக்குழு அறிக்கையை இந்தியத்துணைக் கண்டத்தில் உள்ள மற்ற முதன்மையான மொழிகளில் பெயர்த்து, பரப்பிட வேண்டிய நடவடிக்கைகளில் ஒத்த கருத்துடையவர்களோடு ஈடுபடுகிறது.

12 தமிழ் நாட்டில் உள்ள சமூக அமைப்புகளால் ஒருங்கிணைந்து முன்னெடுக்கப்படும் 'போர்க்குற்றம் - இனப்படுகொலைக்கு எதிரான மன்றம்' உருவாக தொடர்ந்து உதவுகிறது. இந்த மன்றம் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் உள்ள கல்வியாளர்கள், நுண்ணறிவாளர்கள், மனித உரிமைப் போராளிகளை ஒருங்கிணைத்து ஈழத்தமிழர்களின் அரசியல் விடிவிற்குக் குரல் கொடுக்கப் பாடுபடும்.

13 தமிழ்/தமிழின நலன் சார்த்து சிறப்பாக செயற்படுவோருக்கு அவ்வப்போது நன்றி, பாராட்டுக் கடிதங்கள் பலவற்றை அனுப்பி உள்ளது. அவ்வமைப்புகளுக்கு தொடர்ந்து பொருளுதவி செய்து வருகிறது.

14. தோழர் தியாகு மற்றும் கவிஞர் தாமரை ஆகியோருடன் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.